



ஓலை 168| ஓசை 291| ஏப்ரல் 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## 'காந்தியகவிஞர்' இராமலிங்கம் பிள்ளை

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

தந்தை மகற்காற்று நந்தி அவையத்து
முந்தி இருப்பச் செயல்

## பொருள்

ஒரு தந்தை தன் மகனுக்குச் செய்யக்கூடிய மிகச்சிறந்த கைம்மாறு (உதவி), கற்றறிந்தவர்கள் நிறைந்த அறிவுச் சபையில் தன் மகன் முதலிடத்தில் (சிறந்து) விளங்குமாறு அவனை வளர்ப்பதே ஆகும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி



97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை!

பாவகை : நிரையசைக் கட்டளைக் கலிப்பா




நிலவில் செங்கதிர் வெண்முகில் தன்னிலே
நிலவா கார்மன கள்ளமாம் சிந்தனை;
உலவும் விண்ணகக் கோள்களில் கள்ளமாய்
உண்டு கார்முகம் என்பது போலவே
நிலத்தில் வாழ்ந்திடும் மாந்தராம் நம்மிலும்
நெடிய கள்ளமாம் சிந்தனை ஏற்பதோ?
அலந்தே பார்த்திட வெண்மையின் உள்ளமோ
அடைந்தவர் தன்னிலே கள்ளமோ வராதே!

சிலந்தி சீர்வலை பின்னுதல் வேலையே;
தேனீயோ தேனினை சேகரித் தல்பணி;
அலகால் கொத்துதல் நன்மரங் கொத்தியின்
அதனின் வேலையே; ஆறுமே ஓடுதல்
உலகில் வெள்ளையாய் கொண்டதன் வேலையே;
உளத்தில் கள்ளமாம் சிந்தனை கொள்ளுதல்
நிலத்தில் வாழ்ந்திடும் மாந்தரின் வேலையா?
நிலைத்து வாழ்ந்திட வெள்ளையாம் நெஞ்சமே!




**இலக்கணக் குறிப்பு:**

கட்டளைக் கலிப்பா ஒரு வகை. கலிப்பாக்களில் பெரும்பான்மையாக மா, விளம், விளம், விளம் என்னும் மெய்யெழுத்துக்களான வாய்பாட்டில் அரையடிக்கு நான்கு சீராகவும் ஓரடிக்கு எட்டுச் சீராகவும், நான்கடி கொண்டு, எண்சீர் மண்டிலம் போல் மடக்கி வரும். வரி எண்ணிக்கையில் ஒரு பாடல் எட்டு வரிகளாக அமையும். அடி தோறும் முதல் சீரும் ஐந்தாம் சீரும் மோனைப் பெற்று வரும். மேலேயுள்ள பாடல் நிரையசைக் கட்டளைக் கலிப்பா என்பதால் அரையடிக்கு ஒற்றுகளை நீக்கி எண்ணிப் பார்த்தபோது பன்னிரண்டு எழுத்துகள் வரும் நேரசைப் பாடலைத் தொடங் சீரில் தொடுங்குவது போல், நிரையசைப் பாடலை புளிமாவில் தொடங்கும் போது தேமா தொடங்க வேண்டும். ஈரசைச் சீர்களாக விளச்சீர்களில் வந்து பாட்டு முடியும்போது ஈற்றடியின் ஈற்றசை ஏகாரத்தில் முடித்தல் வேண்டும். சிறுபான்மை சீர்கள் காய்ச்சீர் விரவி வந்திடினும் எழுத்தெண்ணிக்கை சரியாக வருதல் வேண்டும் எழுத்துக்களின் கட்டுப்பாட்டில் எழுதுவதால் இப்பாடல் கட்டளைக் கலிப்பா எனப்படும்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

## பாவகை : கட்டளைக் கலித்துறை

கல்வியை நாளும்
கசடற கற்க
களித்திடுமே

கல்லா திருந்தால்
கபடம் நிறைத்தே
கதழ்ந்திடுமே

மல்லல் பெருக
மனமும் சுருங்கி
மழுப்பிடுமே.

அல்லல் இன்றியே
அடக்கமாய் வாழ்ந்தால்
அலர்ந்திடுமே.



கவிஞர் செ. கலைவாணி

# மனிதனென்று

என்னோடு உறவாடிய
நீங்கள்
நான் அங்கு இல்லையென்ற
கணிப்பில் உதடுகளின்
வார்த்தைகளால்
என்னைத் தூற்றத் தொடங்குகிறீர்கள்.

அங்கு என் இருப்பை
உனக்குத் தெரிவிக்கும்படியான
அத்தருணத்தில்
சாட்டையால் அடிவாங்கியபடி
முகத்தை பாவமாக்கிக் கொண்டு
பேசியதை மழுப்பத் தொடங்குகிறீர்கள்.



உள்ளொன்று வைத்து
புறமொன்றுப் பேசிப் பழக்கப்பட்ட
நீங்கள்
உங்களின் வசதிக்கேற்ப என்னிடம்
மன்னிப்பை எதிர் நோக்குகிறீர்கள்.

மன்னிக்க அருகதையற்ற
உங்களைப் பாவம் பார்த்து
நான் மன்னித்தப் பின்னரும்
இருக்கும் காலம்
அகஅழுக்கைக் களையாமல்
அப்படியே இருப்பீர்களேயானால்
நீங்கள்
மனிதனென்று சொல்வதற்கே
தகுதியற்றவர்கள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# பேருந்து சாலை



உறவுகளை இணைக்கும்
உயிரில்லாத சாலைகள்

தினந்தோறும் நசுக்கப்படும்
முகங்களாய் சாலைகள்

பேருந்தின் தாலாட்டில்
இசையாய் சாலைகள்

பல்வேறு தொழிலாளர்களின்
முகவரிகளாய் சாலைகள்



எளியோர் உறங்கும்
தொட்டில்களாய் சாலைகள்

சிறு வியாபாரிகளின்
சொர்க்கமாய் சாலைகள்

தேடல்களின் நீண்ட
பயணங்களாய் சாலைகள்

மாநிலங்களின் வரவேற்பு
வளைவுகளாய் சாலைகள்

மக்களின் அன்றாட
தோழர்களாய் சாலைகள்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# காதலின் பிறப்பு



அன்றுதான் நானும் அவளும்
சந்தித்த முதல் நாள்!
அந்த நாளே வித்திட்டது
பின் நாம் இணையும் நாளுக்கு!
இறைவன் எப்போ எம்மைப்பற்றிய
திட்டங்களை எழுதி வைத்துள்ளார்
புரிந்தது பின்னாடி!

நீயும் நானும் சேரும்போதே
நெஞ்சில் ஏதோ ஓர் உணர்வு
பழகப் பழக பாலும் புளிக்கும்
பால் புளிக்கவில்லை தித்தித்தது!

உன்னைக் கண்டதும் என்னில்
வீணான பொய்க் கோபங்கள்
ஊடல்கள் கூடியதும் கண்டு கொண்டேன்
நீ என்னுள் வாழ்கிறாய்
உன்னிடம் தோற்றுவிடவில்லை எனக் காட்டி
நானே என்னை ஏமாற்றிக் கொண்டேன்!

காலப்போக்கில் நீயும் நானும் பிரிந்த வேளையில்
நீயின்றி வாழ முடியாது என என் காதல் சொன்னது
எனக்கு இப்படி இருப்பது போல அவளுக்கும்?
விநாடிக்கு விநாடி வினாக்கள் என்னில் அதிகமாயின!

காலத்தின் பிடியில் அவள் மனதையும் அறிந்தேன்
அவள் தன் காதலை வெளிக்காட்டினாள்!
காதலில் தோல்வி கண்டவரே
"வெற்றியாளர் " எனச் புன்னகையால் பதில் சொன்னாள்!

இறைவன் "எனக்கு நீ" "உனக்கு நான்"
திட்டம் வகுத்ததை
நினைத்துப் பார்க்கிறேன் புல்லரிகின்றது இன்றும்!
காதல் என்றால் அது நம்மில் ஏற்படும் உணர்வு
எப்பவும் வரலாம் எப்படியும் வரலாம்!

சில வேளை தோற்றுப்போன சந்தர்ப்பங்கள்
பல விலையற்ற பெறுமதியான சந்தோஷங்களை தந்தது
சாவின் நெருக்கடியில் அவள் துடித்தது
காதல் சாவதில்லை என புரியவைத்தது!

என் காதலா இல்லை; அவளின் காதலா அதிகம்?
மன்னிப்பு விட்டுக்கொடுப்பு இடையே நின்று
காதலின் நறுமணம் புதிதாய்
பிறந்திடச் செய்கிறது அனுதினமும்!

கவிஞர் திருமதி. ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை, இலங்கை

# வா துமுற் கூறேல்

(பெரியோர்களிடத்தில முற்பட்டு வாதாடதே)

அறிவியல் உலகில்
செறிந்தே தழைத்திடினும்.
நெறியியல் தெரிந்த
பெரியோர் அனுபவம்கேள்

அறம் பொருள்
உரமேறப் பெற்ற
நற்றவம் செய்யும்
நன்மக்களிடம் வாதுமுறாதே.



முன்மதியினை அருவியாய்
முக்காலத் தொனியுடன்
முப்பெரும் காப்பியம்
முற்றுத் தெளிந்திடினும்.

செருக்குடன் அளவளாவும்
செவிவழி பேதமை
செம்புலமாய் நீக்கிட
செய்யுளில் ஆய்ந்திடு.

பெரியோர் வாழ்வின்
பெருகிய அனுபவம்
பெருந்துறை உணர்வாய்
பெருஞ்செல்வமாய் கண்டிடு.


கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

நான் மூடிவைக்கப்பட்ட
புத்தகம்தான்!
ஆனால்
உங்கள் பார்வைக்காக
ஒருசில பக்கங்களை மட்டும்
திறந்து வைத்துள்ளேன்!

திறந்த பக்கங்களையே
பார்க்க முடியாத
உங்களால்
முடக்கப்பட்ட வரிகளை
அறியவே முடியாது!

பேருந்துப் பயணியிடம்
அன்பை மட்டுமே
காட்ட முடியும்;
தொலைதூர ரயில்
பயணியே...
என் கோபத்தோடு இணைந்த
அன்பையும் காண்கிறான்!

மூடிவைக்கப்பட்ட
பக்கங்களில்
ஒரு வரியே இது!



கவிஞர் என். ரிஷானா, ஓட்டமாவடி

# நினைவு அலைகள்

நினைவுகள் தொடருமே நீடித்த அலைகளாய்!
தினமும் கவலையாய் கண்ணிலே நிலைக்குமே!
பயணமாய்ப் படருமே பகுப்பின் சிகரமாய்!
உயர்ந்த சிந்தையை உணர்வில் தருமே!



கவலைகள் மறக்க கண்ணிய உணர்வாய்,
கவனமாய் காக்கும் கரத்தின் நினைவாய்,
சிகரமாய் வளர்க்கும் சிந்தையின் வளர்ச்சி -
பகிருமே மனதினில் பல்வண்ண உயர்வாய்!

உள்ளத்தின் நிறைவை உயர்வாகப் பேசியே,
வெள்ளமாய் அலையும் வெற்றியின் பாதையே!
நீங்காத வடுவாய் நீடித்துத் தொடர்ந்து,
தாங்காத துயரையும் தரணியில் தருமே!

காவலாய் நிற்கும் கருத்தின் உணர்வில்,
தாவிடும் மனதைத் தவிர்க்குமே மண்ணில்!
தனக்கென வாழாத தன்னிகரில்லா எண்ணமும்,
தினமும் வளர்க்கும் திரண்ட மகிழ்வாய்!

பெற்றோரை மதிக்கும் பெருமைக் குழந்தையாய்,
உற்றோரை மதித்து உண்மையாய்ச் சிறக்குமே!
வருங்காலம் சிறக்க வசந்தமான உறவாய்,
சுருங்காமல் நிலைத்துச் சிகரமாய்க் காப்போமே!

உறவுகள் குழுமியே உண்மையாய் வாழ்ந்து,
திறமைகள் பெருக்கித் திரளுமே உலகில்!
வேண்டிய உதவியை வேற்றுமையின்றிச் செய்தே,
தூண்டும் திரியாய்த் தூதனாய் நிறைவோமே!

எத்தனை காலங்கள் எழுத்தாய் திகழ்ந்தாலும்,
அத்தனை நினைவும் அருவியாய்ச் சுரக்குமே!
கற்பனை வாழ்வின் கடந்திட்ட பாதையாய்,
தேற்றிடும் நட்பாய்த் தேர்ந்திட்ட விதையாகவே!

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# இப்படிக்கு பூங்காற்று

ஒரு கணமாவது
அன்பின் வாசல் முழுதாய் திறக்காதோ
என்ற எதிர்பார்ப்பில் தான்
ஒவ்வொரு நாளின் புலர்தலிலும்
இதயம் தன் தாளை நீக்குகிறது!

அலங்கார மிடுக்கில்
எதிரே நடனமிடும்
பகல்வேட கோமாளியின்
ஒற்றைச் சிரிப்பில்
மனமெனும் தம்பூரா மெல்ல முறிகிறது!

காததூரம் கடந்தபின்
ககனவெளியில் உலவித் திரியும்
மேகப்பொதியின் மீதேறி
ஒற்றைக்காலில் தவம் இயற்றும்
மனதின் சிறகை மெல்லப் பிடித்து
இழுத்து வருகிறது - உந்தன்
ஓவியப் புன்னகை!



உருட்டிய சோளியாய்
நீ உதிர்க்கும் வார்த்தையில்
என் மனமென்னும் பாலை
மெல்லப் பூத்ததும்
கைகுலுக்கிக் கொள்கிறது
காதல் பூங்காற்று!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# நிழலும் கனியும்




மாங்கன்று ஒன்று
முன் வாசலில் நட்டேன்; நான்.
ஆசையாய் நீர் வார்த்து
ஆர்வமாய் காத்திருந்தேன்.
நிழல் தரும்; கனி தரும்;
காலம் கனியும் என்று இருந்தேன்.

சிறிது சிறிதாய் உயர்ந்து வந்ததது.
பெரிது பெரிதாய்
கிளைகளும் இலைகளும்.
கிளைத்து வளர்ந்ததுஃ;
படர்ந்து கிளர்ந்தது.

பரவும் நிழலும் கனியும் கனியும் உனதாகுமா;
அன்னையின் வினாவை ஒதுக்கினேன்.
கிளை கொள்ளா மாம்பூக்கள்
தேனீக்களின் கூட்டம்
மாலைக் காற்றில் காணாமல் போச்சு

"மா பூத்தது என மயங்காதே
மக்களைப் பெற்றோம் என நினையாதே"
சொலவடை தான் என்றே
அன்னை சொன்னாள்
இந்த வருடம் உறுதியாய் காய்க்கும்
திடமாய் நம்பு என்றாள்
எனக்கு ஆறுதலாய்:
என் முகத்தை பார்க்காமல் தான்!

தேர்வில் தேர்ச்சி சென்னை வாசம்
விடுதியில் வாழ்க்கை
கோடை மழையில் மாம்பிஞ்சுகள் உதிர;
என் நெஞ்சில் உதிரம்.
வருடங்கள் உருண்டன அமெரிக்க வாழ்வு

அலைகடலுக்கு அப்பால் அலைபேசி பேசியது
காணொளியாய்
மாமர நிழலில் கயிற்றுக் கட்டில்
ஐயனின் படுக்கை

மாங்கிளையில் ஊஞ்சல் ஆடும் அன்னை
பொன்னிற மாம்பழ துண்டுகளால் நிரம்பிய தாலம்
நிழலும் கனியும் தரு வைத்தவனுக்கு இல்லை.
கொடுத்து வைத்தவருக்கே

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# சொல்லாமலே

## (ஒருதலைக் காதல்)

யாரும் அறியாத
நீயும் படிக்காத
ஓர் காதல் கதை நானே!

உனக்கே தெரியாமல்
கவிதையே
உன்னைப் படிக்கும்
வாசகன் ஆனேன்!

தொடாமல் பேசும்
வார்த்தைகள் நானே
சப்தமின்றி கரையும்
மௌனங்கள் ஆனேன்!

தூரத்தில் ரசிக்கும்
விழிகள் நானே
அருகே நீ வருகையில்
நடுங்கி உடையுது
என் இதயம் தானே!
அள்ளிக் கொள்ள நினைத்தும்
தள்ளி விலகியே நடந்தேன்!

நிலவைத் தீண்டும்
வானம் அல்ல என் காதல்
நிலா ஒளியில் கரைந்து போகும்
கடல் நீர் தானே!
சொல்லாமலே சொல்லாமலே
துடித்துப் போகுது என்னுள் காதல்!

ஒப்புக் கொள்வாயா
இல்லை
விட்டுப் போவாயா?



பயத்தின் பயணத்தில்
நின்று போய்விட்டது என் காதல்!

காதலைச் சொல்ல
காலம் கூடவில்லை
உன்னோடு வாழ்வதற்கு
என் காதலுக்கும் வாய்க்கவில்லை!

என்றாலும் கூட

காலமெல்லாம் உன்னை
காதல் செய்வேன்
உனக்கே தெரியாமல்
உன் காதலாய்
வாழ்ந்திடுவேன்!

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

# இரவின் மடியில்

அமைதி நிலவிடும்
அன்பின் விடுதி!
ஆறுதல் கிடைக்கும்
ஆலயம் நிலவு!
இன்பம் பொழியும்
இரவின் மடியில்.
இளைப்பாற ஓரிடம்
இரவின் நிழலில்!



மெல்லிய தென்றல்
மெல்லிசை பாட,
மெதுவாய் வருடும்
பெண்மையின் விரலால்!
தேக வறட்சிக்குத்
தாகம் தணிக்கும்,
மோகம் தீர்ந்திடும்
மேகக் குளிர்ச்சியில்!

அதிகாலை விடியலில்
அழகு மன்மதன்,
அழகாய்க் குளிக்கும்
அண்டக் கடலில்!
ஆதவன் பெயரில்
ஆகாய வானில்,
அதிசய மூலிகை
அகிலம் மருத்துவன்!

எண்ணப் பசிக்கு
வண்ண விருந்து!
வானவில் படைக்கும்
வானத்து அமிர்தம்!
வளைந்த நிலையில்
விளைந்த அழகில்,
விண்ணில் காட்சி
மண்ணில் ரசிக்க!

விழிகள் தேடும்
வழிகள் எங்கே?
இரவில் மலரும்
இன்ப விளக்கின்.
இல்லறம் செல்ல
இதயம் துடிக்கும்!
தொலைவில் நீயும்
தொட முடியாமல் நானும்!

இன்னொரு பிறவி
இருக்கும் என்றால்,
பறவைப் பிறவியில்
உறவை வளர்த்து.
உயிரைக் கொடுத்து
உன்னிடம் சேர்ந்து,
உலகை ரசிப்பேன்
உயரத்தில் அமர்ந்து!

கவிஞர் கோ. ஏழுமலை, நத்தாமூர்

# விண்மீன்கள்

என்னவளின் அழகை உள்வாங்கி
விண்மீன்கள் புடைசூழ
வானில் பவனி வரும்
நிலாப்பெண்!

கரியநிற வானத்தில்
காரிகைகளின் கண்சிமிட்டலாய்
தாரகைகள்!

மனதில் ஆடும்
எண்ணிலடங்கா ஆசைகளின்
ஒட்டுமொத்தத் தொகுப்பாக
தாரகைகள்!

அடிமனதின் ஆழத்தில்
அலங்காரமாக ஆரணங்கு

அமிழ்த்தி வைத்த ரகசியமாய்
தெரிந்தும் தெரியாததுமாய்
வானில் தாரகைகள்!

சின்னஞ்சிறு பிள்ளைகளின்
உள்ளங்கையில் மதிப்பீடின்
குறியீடாக மலரும் சிவப்புநிற
தாரகைகள்!

நிறைவேறாத ஆசைகளோடு
எரிகற்களாய் நிலம் நோக்கி
வீழும் விண்மீன்கள்!



மனம் கவர்ந்த கண்ணாளன்
முகம் பார்த்து மலர்ந்திடும்
மங்கையவள் வதனம் போல்
பகலில் வரும் பெரிய விண்மீனாம்
சூரியனின் கதிர்களை சுவீகரித்து
காதலாய் இரவில் மலரும்
வெண்மதியாள்!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# பெண்ணே எழு! பெண்ணே பேசு!

பெண்ணே! உன் கால்கள் மண்ணில் பதிந்த
கதைகளைக் கேட்டதுண்டா?
அடுப்புக்குள் எரியும் தீயில்,
பாட்டி சொன்ன பழமொழியில்,
பள்ளி வாசலில் நீ கட்டிய கனவுகளில்
எல்லாம் அமைதியாய் காத்திருக்கிறது,
நீ சொல்கிற வார்த்தைக்காக.



எழு! சுவர்கள் "அடங்கு" என்றபோது,
நீ "கேள்வி" என்று எழுது.
அச்சம் கதவை தட்டும்;
நீ மூச்சைத் திறந்து,
"நான் இங்கே இருக்கிறேன்"
என்று சொல்வது தான் முதல் விடியல்.

பேசு! அம்மா சொல்ல மறந்த வலியை,
தோழி முழுதாகச் சொல்லத் தயங்கிய நியாயத்தை,
மகள் நாளை கேட்கும் உரிமையை.
குரல் உடைந்தாலும் பரவாயில்லை;
உடைந்த குரல்களில்தான் புதிய பாட்டு பிறக்கும்.

நினைவில் வைத்துக்கொள்:
உன் பெயர் பட்டியலில் வராமல் போனாலும்,
நீ எழுதாத வரலாறு இல்லை.
ஒவ்வொரு "இல்லை"க்கும் பின்னால்,
நீ "ஆனால்" என்று தொடங்கிய ஒரு வரி இருக்கிறது.

இன்று, தயக்கத்தை மேசையின் மீது வைக்காதே
கீழே போட்டு; அதன் மீது ஏறி நின்று பேசு.
நீ பேசும் ஒவ்வொரு வாக்கியமும்,
அடுத்தவளுக்கு கைப்பிடி;
அவள் எழுவாள், அவள் பேசுவாள்.

பெண்ணே! எழு! பேசு!

கவிஞர் ஏ எம் முர்ஷிதா, கண்டி (இலங்கை

## தோழிகளின் நினைவு

கருநிற வானிற்கு முத்தமிட்டு
புன்னகைக்கின்றது விண்மீன் - அதுபோல்,
என் தோழிகளின் நினைவுகள்
நாளும் முத்தமிட்டுப் புன்னகைக்கின்றன என்னுள்.

## இரட்டைக் கதிர்

தாயவளுக்கும் இவ்வுலகிற்கும்
அறிமுகம் ஆகும் முன்னரே,
இரு முகங்களும் அறிமுகம் ஆகின்றன
தாயின் கருவறையில்!



கவிஞர் லதா, திருப்பூர்

# தண்டனையோ இவ்வாழ்வு?



மறைந்த தேகத்தை
மனம் தேடி அலைகிறது.
தேம்பி அழுகிறேன்

நிஜம் நினைவாக மாறியதை எண்ணி!
நித்தம் நித்தம் நினைவே
வாழ்வாகிப் போனது.

நிஜத்தில் வருவாய் என
உள்ளம் துடிக்கிறது.

உன் குரலைக் கேட்டுவிட மாட்டேனா என்று
செவிகள் காத்துக் கிடக்கின்றன.

எல்லாம் மாயை என்று உணர்த்தியதேனோ?
உள்ளம் உதிரம் வடிக்கிறதே!

எண்ணமோ பல சிந்தனைகளில் உழல்கிறது.

பெண்ணாய்ப் பிறந்தவளின்
தண்டனையோ இவ்வாழ்வு?

கவிஞர் சுமதி தசரதன்

# ஏனிந்த நிலை




அப்பா நான் முதல் மூச்சை விட்ட பொழுது
தாங்கள் உடனிருந்தீர்கள்.
நானோ உங்கள் கடைசி மூச்சு
நிற்கும் பொழுது உடனிருந்தேன்.

கனவுகளும் மகிழ்ச்சியும் நிறைந்த மனதுடன்
நான் முதன் முதலில் உடுத்திய
உடையை தேர்ந்தெடுத்தீர்கள்.

நானோ உங்களுக்கு கடைசி உடையை
தேர்ந்தெடுத்தேன்.துயரம் நிறைந்த இதயத்துடன்.

என்னை உலகிற்கு வரவேற்க்க
என் பிறப்பு சான்றிதழில் கையொப்பமிட்டீர்கள்.

நானோ உங்களை உலகத்திலிருந்து
அனுப்பி வைக்க இறப்பு சான்றிதழில் கையொப்பமிட்டேன்.
அன்புடனும் அக்கறையுடன் மென்மையாக
என் முதல் குளியலை அளித்தீர்கள்.

நானோ உங்கள் கடைசி குளியலை
கண்ணீருடனும் நடுங்கும் கரங்களாலும் அளித்தேன்.
மகிழ்ச்சியுடன் என்னை
மருத்துவமனையில் இருந்து கொண்டு வந்தீர்கள்.

நானோ மறைக்க முடியாத கண்ணீருடன்
மருத்துவமனையில் இருந்து கொண்டு வந்தேன்.

இப்போது ஆம்புலன்ஸ்ம் மருத்துவமனை சுவர்களும்
நம்பிக்கையாக தோன்றவில்லை.
ஏனெனில் ஒருமுறை அவை என் தந்தையை
மீண்டும் கொண்டு வந்தது .
ஆனால் உயிரின்றி.

அவரின் முதல் அணைப்புக்கும்
கடைசி விடைபெறுதலுக்கும் இடையில்
நான் ஒரு கதையாகி போனேன்.
அவர் தொடங்கியதை.

நான் மட்டும் முடிக்க வேண்டிய கதையாக
எனது மனதின் துயரங்களை
வலியுடன் வடிக்கிறேன்

என் தந்தைக்கு கண்ணீர் பா மாலையை
சமர்ப்பிக்கிறேன்

கவிஞர் தி. உஷா ஜெயசுதா, சென்னை

# அம்மா

அம்மா என்றால்
அழுகையில்
ஆறுதல் தரும் தாய்;
அழகான உலகம் காட்டும்
வழிகாட்டி!



கண்ணீர் வரும் முன்
என் மனதை வாசிக்கும்
மந்திரம் அவள்;
காயம் வரும் முன்
என் வலியை உ
ணரும் சக்தி அவள்!

என் முதல் காதல்,
என் கடைசி நம்பிக்கை,
என் உயிரின் உயிர்
அவள் தான் "அம்மா"!

உலகம் முழுவதும்
என்னை மறந்தாலும்,
ஓர் இதயம் மட்டும்
என்னை என்றும் நேசிக்கும்
அது "அம்மா"!

கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

எண்ணங்களை எழுத்தாக்கி
சிந்தனைகளை சீராக்கி
துகல்களை தூய்மையாக்கி
வலிகளை வலிமையாக்கி
பலத்தினை பாடமாக்கி
பலவீனத்தை சுலபமாக்கி
எழுதுகோலின் கிறுக்கலால்
எழுத தொடங்கினேனே.



கவிஞர் மா. மோனிஷா

வேனில் தின்ற பெரும் புனல்
வண்டல் முகம் திரிய
வேர றுந்து விழுந்த தளிர்.

வெண்கதிர் தீண்டி ஓடை தேய
வெம்பி வாடிய மாக்கள்.
விசும்பு பொய்த்துப் போக
வீழ்ந்த மணிகள்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# உன்னாலே நான் முழுமை

உன் பார்வை தொட்ட தருணம்
உலகம் எனக்குள் மாறியது
உன் பெயர் சொன்ன ஒலி மட்டும்
உயிரின் இசையாகியது!



நிசப்தமான இரவுகளில்
நினைவுகள் பேசத் தொடங்கின
நீ இல்லாத நேரங்களிலும்
நெஞ்சம் உன்னால் நிரம்பியது!

மழைத்துளி சாளரத்தில் விழும்போது
உன் விரல்கள் தட்டுவது போல
மனதின் ஓரத்தில் மறைந்திருக்கும்
உன் சிரிப்பு வெளிச்சமாகிறது!

நிழலாய்ப் பின்தொடரும் உன்னை
நிமிடமும் மறக்க முடியவில்லை
நீ இல்லா வாழ்வு எனக்குள்
நிறமற்ற ஓவியமாகிறது!

இதயம் ஒரு வீணை என்றால்
நீயே அதன் இனிய இசை
இரவு ஒரு கனவு என்றால்
நீயே அதன் அழகான நிழல்!

காதல் என்பது வெறும் வார்த்தையல்ல
உயிரோடு எழுதும் உன்னத உண்மை
நீ அருகில் இல்லையெனினும்
உன்னாலே நான் முழுமை!

கவிஞர் ஹரீஷ். ம, பாலூர், செங்கல்பட்டு மாவட்டம்

# கல்யாணப்பரிசு

அழகிய பந்தமிது
ஆனந்தம் புகுந்தாடும்!
புரிதல் புதிதாய்ப் பூத்திட
நறுமணத்தின் வாசல்
கதவு திறந்திடும்!

அன்பெனும் மழையை அழகாய்ப்
பொழிந்திடுங்கள்;
பொறுமையும் நம்பிக்கையும்
வரமாய் வாங்கிடுங்கள்!

விழியின் மொழியறிந்து
விழிகள் பேசிட,
எண்ணங்கள் ஒன்றாகி
எளிதில் இணைந்து
மனதோடு பேசுங்களேன்!

வீண்வாதம் பண்ணாமல்
விட்டுக் கொடுங்களேன்;
உறவுகளை நேசித்து
உறவாடிப் பாருங்கள்!

உயிரின் ஓசை இருவருக்கும்
ஒன்றாய்க் கலந்திட,
ஆசைகள் அளவாய் இருந்திட
கஷ்டங்களில் கைகோருங்கள்!

சுகமாய்ச் சாய்ந்திடத் தோள்
கொடுங்கள்;



வாழும் காலமெல்லாம் காதலாய்
கசிந்துருகி.
முதுமையிலும் காதலோடு
வாழ்ந்து பாருங்களேன்!

வாசலில் வண்ணத்தோரணம்
வந்தாடும்;
கல்யாணப் பரிசு இருவரின்
புரிதலில் பூப்பது!

கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# கட்டிக் கரும்பே கண்ணம்மா

உன் மனசுக்குள்ள என்னம்மா?
மறைக்காம சொல்லம்மா!
ஆசைப்பட்டேன் நானம்மா
தள்ளியே போவதென்னம்மா?

என் மனசு புரியலையா?
சொல்லாமப் போறியே!
ஓரக்கண்ணால பார்க்கிறே
உதட்டத்தட்டான் சுழிக்கிறே!

நானும் பார்த்துப்புட்டா
நாணப்பட்டு ஓடுற!
உறவுக்காரன் நான்தானே
ஒதுங்கியே போகலாமா?

பக்கத்துல வந்துதான்
பேசினாக்கத் தப்பில்லை!
தாவணி போட்ட சிட்டே
என்னோட அழகு மொட்டே!

மாராப்புல என்னை
ஒளிச்சிருப்பது தெரியுமடி!
இன்னுமென்ன வெட்கம்?
நெருங்கி வா பக்கம்!

செம்பவள உதட்டால
சிரிச்சுத்தான் பேசினாலென்ன?
சித்தகத்திப் பூ கண்ணுக்குள்ள
சிக்கிக்கிட்டேன் நானடி!



சின்ன இடை அசைந்தாட
மனசுந்தான் கிறங்குதடி!
கொலுசு சத்தம் கேட்கையில
ஆவலுந்தான் கூடுதடி!


பரிசந்தான் போடுறேன்டி
பந்தக்கால் நட்டுறேன்டி!
நல்ல நாளு பார்த்துதான்
கல்யாணம் கட்டிக்கலாம்!

சம்மதம் சொல்லிப்புட்டா
சந்தோஷமா வாழ்ந்திடலாம்!


கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# திருக்குறள் வாழ்த்து

முப்பால் கண்ட முனிவர்தான்
இப்பால் வடித்தார் திருக்குறளை.
ஈரடி குறளில் இருப்பதெல்லாம்
ஈசனின் அறிவுரை நமக்கேதான்.
வாழ்க்கையில் பாடம் கற்றிடுவோம்
வாழ்க்கைக்கு உதவிடும் குறள்தானே.
அறப்பால் வடித்த குறள்களிலே
அறவழியில் நடந்திட உதவிடுமே.
பொருட்பால் கண்டிட பொருப்புகளும்
பொருளும் சேர்த்திட வழிகிடைக்கும்.
இன்பம் தந்திடும் இனிமையுடன்
இன்பத்தில் காமம் இணைந்திடுமே.
அகரம் முதலில் துவங்கிடுமே
அதிலும் மொழியின் துவக்கமாகும்.
சிறுகச் சொல்லிடும் சிறப்புகளை
சிறுமை இல்லா வாழ்விற்கு.
தமிழின் அருமை உலகறியச்
செய்தது குறளே நமக்காக.
அருமை அறிந்த ஆன்றோர்கள்
அனுதினம் படிப்பர் திருக்குறளே!




கவிஞர் முனைவர் இரவி சீனுவாசன்@ பகலவன்



அமைதியான எண்ணங்கள்
அழகானவை.
அங்கு கானகமாக இருந்தாலும்
குளிர்ந்த தென்றலும்
மிதமான பனித்துளிகளும்
அந்த ஒட்டுமொத்தத்
தேசத்தை ஆட்சி
செய்கின்றன.

யாரையும் புண்படுத்தாத
மெல்லிய மலர்மணம்,
நுகர்வுகளை நகர்த்தாமல்
நிற்கின்றது.

கவிஞர் சேஹூ மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# உயிர்த்துளி

வண்ணப் பூக்களின் சிரிப்பினிலே
சின்னஞ்சிறு உலகம் இயங்குதடா!
வானம் பார்த்த பூமியிலே
வள்ளல் இயற்கை கசிந்ததடா!

சாதி சமயப் பேதமில்லை
தாகம் தீர்க்கும் வேளையிலே!
பகிர்ந்துண்ணும் பண்பினிலே
பரிசுத்தம் கொள்ளும் பாதையிலே!

மொழிப் பாகுபாடு ஏதுமில்லை
மோதும் அலகுகள் பேசுகையில்!
எளிதாய் தாகம் தணிப்பதிலே
எதற்கு வீண் பிணக்குகள் மனிதரிடை?

ஒரே ஒரு நீர்த்துளியில்
இரு உயிர்கள் தாகம் தணிக்குதப்பா!
நிறைந்த உள்ளம் இருந்தாலே
அமைதி என்றும் நிலைக்கும்ப்பா!

முற்றத்து மண் கிண்ணத்தில்
நீ வைக்கும் ஒருதுளி நீர்த்துளியும்,
இயற்கை அன்னைக்கு நீ செய்யும்
இணையற்ற பெரும் நன்றியடா!

நாம் கொடுக்கும் ஒரு துளியில்
ஒரு ஜீவன் சுவாசம் வாழுதடா!
ஈரம் உள்ள இதயங்களே
இந்த மண்ணின் மெய்யான செல்வமடா!



கவிஞர் காவ்யா, நாகர்கோவில்

**1**
பூக்கள்
வாசத் துரோகம் செய்வதில்லை;
மனிதர்கள்
பாசத் துரோகம் செய்வது போல்!

**2.**
படித்தால் உயர்வாய் என்றார்கள்;
படித்தேன்.
உயரே போக முடியவில்லை,
கீழே இழுக்கிறது
சாதி.

**3.**
மனைவி வரும் வரை
அம்மாவிற்கு முதல் இடம்;
மனைவி வந்துவிட்டால்
முதியோர் இல்லத்தில்
இடம்!

**4.**
உதவி என்றதும்
உயிரைக்கூடத் தருவதுதான்
நட்பு;
இதை உரக்கச் சொன்னால்
என்ன தப்பு?

**5.**
கடைசி வரை அப்பா
செருப்பு அணிந்ததே இல்லை...
சாதிக்கும்
வீதிக்கும் பணிந்ததால்!

**6.**
கடைசிப் பருக்கை தீரும் வரை
அம்மாவின் மனது
கர்ணனாக இருக்கையில்...
அவள் வயிறு மட்டும்
குசேலனாக இருக்கும்!



**7.**
பாற்கடலைக் கடைவது
எளிது;
பணமின்றிப்
பாசக் கடலைக் கடைவது அரிது!

**8.**
சில்லறையைப் பார்த்ததும்
ஆணவத்தில் நாத்திகம்;
கல்லறையைப் பார்த்ததும்
அச்சத்தில் ஆத்திகம்!

**9.**
நீ இல்லாத
கனவுக் குளத்தில்
நீண்ட நேரம் குளிக்கிறது
ஞாபகப் பறவை!

**10.**
பட்டுச் சேலை கட்டியவர்களின்
ஞாபகத்திற்கு
வருவதே இல்லை...
நெசவாளியின்
ஆடையில் உள்ள
கிழிசல்கள்!

**11.**
வறுத்த மீனைச் சுவைத்தபடி
தொட்டி மீனை
ரசிக்கும்
அஃறிணை மனிதன்!

**12.**
புதிதாக வந்த மருமகள்
தேன் கூட்டில்
கல் எறிந்தாள்.
தனிக் குடித்தனக் கூடு கட்ட!

கவிஞர் முனைவர். அ. சீ. மு. முனியாண்டி

# ஒரு விரல் புரட்சிக்கு

உங்கள் வாக்கு உங்கள் உரிமை
அதை யாருக்கும் எதற்கும் விற்று விடாதீர்கள்
ஓட்டுக்குத் துட்டு
உங்களுக்கு நீங்களே வைத்துக்கொள்ளும் வேட்டு.
ஒரு விரல் புரட்சி
உங்கள் வாழ்வின் உயர்வானதொரு மலர்ச்சி

நல்லதொரு ஆட்சி
நாளும் நமக்கான சாட்சி
நடைபெற செயல்படுத்துவோம்
வாக்குப் புரட்சி

மக்களாட்சியின் மகத்துவம்
மக்களை முதன்மையாகக்குவது.
மக்களே ஆட்சியின் அச்சாணி.
வாக்களிக்கும் முன் சிந்தியுங்கள்
வாக்களிக்க வேண்டுமா என சிந்திக்காதீர்கள்.



கடமையைச் செய்யுங்கள்
உரிமையைக் காத்திடலாம்.
வாக்களிப்பது நமது கடமை
வாழ்வை மேம்படுத்தக்
கேட்பது நமது உரிமை.

ஐந்தாண்டுக்காக நமது ஆயுளையும்
அடகு வைக்காதீர்கள்
வாக்களிக்க வாங்கும் கையூட்டு
உரிமைக்குப் போட்டுவிடும் வாய்ப்பூட்டு.

கவிஞர் இளையவன் சிவா

பெண்ணுக்கு எதிரான
பாலியல் வன்முறையால்
பெண்ணின் உயிர் நாடியிலிருந்து
அலறல்
கடவுளே என்னை
காப்பாற்று என்று




அன்று அவளை
காப்பாற்ற வராத கடவுள்
திருவிழா காலங்களில் மட்டும்
வந்துவிடுகிறது
இசை கருவியின்
ஓசையில் மெய்மறந்து
முதலில் ஆர்ப்பரித்து கொண்டு
வருகிறது

முன் வரிசையை நோக்கி
இசைக்கு நடனமாட
வந்த வேகம் தெரியாமல்
சென்றது
ஒரு கட்டி கற்பூரத் தீயின் சூட்டில்
மனித இனத்தை காப்பவன்
கடவுள் என்றார்களே?

கவிஞர் முனைவர். அ.க. வீரவன்சீசரா, வளையமாதேவி (சிதம்பரம்)

# ஏக்கம்



விளக்கின் திரியில் மிச்சமிருக்கும்
ஒற்றைத் துளி எண்ணெயைப் போல,
முடிவற்ற இரவின் மடியில்
முனகிக் கொண்டிருக்கிறது என் ஏக்கம்!

நீ விட்டுச் சென்ற கால்தடங்கள்
கால நதியோட்டத்தில் கரைந்து போயிருக்கலாம்;
ஆனால், உன் நினைவுகள் மட்டும்
என் இதயத்தின் சுவர்களில்
அழியாத ஓவியங்களாய் ஒட்டிக் கிடக்கின்றன!

பழைய கடிதங்களின் மடிப்புகளில்
இன்னும் வாசம் மாறாமல் இருக்கிறது,
நீ சொன்ன அந்த முதல் பொய் -
'உன்னை ஒருபோதும் பிரிய மாட்டேன்' என்பது!
இப்போது அந்த வார்த்தைகளே
கூரிய அம்புகளாய் என் மார்பில் தைக்கின்றன.

கூட்டத்தில் நின்றாலும்
உன் குரலுக்காகக் காத்திருக்கும் செவிகள்;
யாரோ ஒருவரின் சிரிப்பொலியில்
உன்னைத் தேடும் கண்கள்;
நடந்து செல்லும் பாதையெங்கும்
நீ அமர்ந்திருந்த இடங்களை
வணங்கிச் செல்லும் என் நிழல்!

இது காதலல்ல, ஒரு தீராத தவம்!
காலம் காயங்களை ஆற்றும் என்பார்கள்,
ஆனால் அது வடுக்களைத்தான் தடித்ததாக்குகிறது.
ஒவ்வொரு முறை உன் நினைவுகள் வரும்போதும்
புதிதாய்ப் பிறக்கிறேன் - பின்
'நீ இல்லை' என்ற நிஜத்தில்
மீண்டும் ஒருமுறை இறக்கிறேன்!

காற்றின் திசையெங்கும்
உன் பெயரையே முணுமுணுக்கும் என் உதடுகள்.
வருவாயா மாட்டாயா என்ற கேள்விக்கு
பதில் தெரியாதபோதும்,
வாசல் தெளித்துக் காத்திருக்கிறது என் மனம்!

ஏக்கம் என்பது வெறும் வலியல்ல!
நீ என்னோடு இருந்தாய் என்பதற்கான ஒரே சாட்சி.
நீண்ட தூரம் பயணம் செய்த பின்னும்
தொடுவானம் விலகிப் போவதைப் போல,
உன் நினைவுகளோடு நான் ஓடுகிறேன்;
நிறுத்த மனமில்லாத ஒரு தொடரோட்டமிது!

கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

# காலம் கைவிடாது



முயலுபவனுக்குக் காலம்
காத்திருக்கும்;
முயற்சியில்லாதோர்க்கு அது
கடுகிச் சென்றுவிடும்!

இதிகாச புராணங்கள்
இன்றளவும் நிற்க
காலமே காப்பாற்றியது.

பலவும் அழிந்தன, பலவும்
தேய்ந்து மறைந்தன;
காலம் நினைத்தாலன்றி
காத்தல் அழித்தல் அரிது!

காலதேவன் கையிலுள்ளது
காலச்சக்கரம்;
காப்பதும் அழிப்பதுமே
அதன் அன்றாடக் கடமைகள்!

'காலதூதன் எனைக் கண்டால் கலங்கிட' -
கந்தசஷ்டி வரிகள்!
காலபைரவாஷ்டகம் படிக்கப்
பயம் விலகுமென்பர்.

காலம் பொன் போன்றது என்பது
பெரியோர் வாக்கு!
காலத்தில் செய்த உதவி
ஞாலத்தில் பெரிது - குறள்!

"காலமகள் கண்திறப்பாள் செல்லையா" -
பாடலுண்டு!
காலத்தை மதிப்போம், நல்
விளைவுகளைப் பெறுவோம்!

கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்

# துருத்தும் ஏதொன்று

உணர்வைக் குடித்துக்கொண்டே என்னுள்
துருத்தித் துருத்திப் படுத்தும் ஏதொன்றில்,
வருத்தம் பதம் பார்க்கிறது!

நட்ட நடுநிசியில் தொடர்ந்து
ஊளையிட்டுக் கொண்டே இருக்கும்
நரியைப் போல...


நந்தவனத் தென்றலென நினைத்தவைக்குள்
அகப்பட்டு மடிந்துபோன அன்பினை
அள்ளி அணைத்து,
ஆறுதலிடத் தெரியாமலே தவித்துப் போன
மங்கையென...

நிழலாடும் நினைவுகளையும் மூட்டை கட்டி வைத்த
கறைபடிந்த ஆடைக் குவியலென
ஆக்கிவிட்ட பின்னும்,
ஏதோ தெரியாத ஒன்று
துளைத்தெடுக்கக் கண்டேன்!

அச்சிறு நொடியும் சினமூட்டிய வார்த்தை
குரலுயர்ந்து வெளிவருவதை உணர்ந்தும்,
தடுக்க முடியாமல், தவிர்க்கத் தெரியாமல்
அல்லாடிப் பிடிக்காமல்...
படிந்து போன ஏதொன்றைச் சுமக்கிறேன்!

"என்ன ஆயிற்று? ஏன் சிடுசிடுக்கிறாய்?" என
கேள்விகளுக்குப் பதிலிடத் தெரியாது
மௌனித்துப் போகிறேன்!

துணிவற்றுப் போனதொரு உடற்சோர்வை
என்னுள் தந்துபோன
அந்த ஏதொன்றைத் தேடிக் கரைகிறேன்!




கவிஞர் சுஹீனாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

# வாழ்வின் அணிகலன்

ஊர்கூடித் தேர் இழுத்தே
ஒற்றுமையை வளர்த்திடுவோம்;
உறவோடு கூடியே இனிமை
வாழ்வு காத்திடுவோம்!

கூட்டுறவின் சிறப்பாலே
நாட்டு உயர்வு விளைந்திடுமே;
முன்னோர்களின் வாழ்வியலே
நம்மைக் காக்கும் கேடயமே!



அறம்சார்ந்த வாழ்வாலே
அன்பு என்றும் நிலைத்திடுமே;
இதயம் நிறைந்த அன்பாலே
உறவு சிறக்கும் உண்மையே!

உரிமைக்குக் குரல் தந்து,
உறவுக்குக் கை கொடுத்தால்,
நன்மை என்றும் நம்மைச்
சுற்றம் சூழ வந்திடுமே!


நலம் பயக்கும் வாழ்வாலே
நட்பு என்றும் "விருதாய்",
நம்மை வலம் வரும் என்பது
திண்ணமான உண்மையே!

ஊக்கமும் உழைப்பும் உண்மை
வாழ்வின் அணிகலனாய்,
அழகு சேர்க்கும் என்பது
நித்தமும் உண்மையே!

நேசமும் பாசமும்
நீதியான வாழ்வும்,
வாழ்வில் அமைதி தந்து
நம்மை வகையாய்க் காத்திடுமே!

கவிஞர் ஜேபபி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# விழியால் கொல்லாமல்



விழியால் கொல்லாமல்
மொழியால் சொல்லிவிடு

மந்தாரப் பூவாய்
மனங்கவர்ந்து கொண்டாய்!
மந்திரப் பெண்ணே.
மர்மம் செய்கிறாய்!

இதயம் திறக்க
இனியவளே இயம்புவாய்;
உதயம் வேண்டி
உன்னில் நானாய்.

தேகம் வாடி வதங்குதே
தெள்ளமுதே இனிப்பாய்;
விழியால் கொல்லாமல்
மொழியால் சொல்லிவிடு!

இதழின் உதிர்வைப்
பார்த்துக் காத்திருக்க,
வேதமாய்க் காதலை
ஓதிடு கண்ணே!

தென்றலின் தீண்டலைத்
தழுவிடத் துடிக்கும்,
மரமாய் ஏங்கும்
மன்மதன் நானே!

உயிரின் உணர்வை
உணர்ந்து கூறடி;
பற்றிய தீயாய்ப்
பதறித் துடிக்கிறேனே!

கவிஞர் கிருஷ் அபி

# விடியலின் பேரழகு!

காரிருளைக் களைந்திட கதிரவனின் வருகை!
பரவிடும் ஒளிக்கதிர் பனியினை விலக்கி!
பளிங்குபோல் பனித்துளிகள் புற்களின் நுனியில்!
ஒளிர்ந்து வழிகிறதே மண்ணின் மடியில்!
செந்தூர நிறம் காட்டும் கீழ்வானம்!
எந்தவொரு ஓவியனும் விழைந்திடும் கோலம்!
இறைதேடிச் சிறகடித்து கூடுநீங்கும் பறவைகள்
எழுப்புகின்ற இன்னிசைகள் இயற்கையின் கீதங்கள்!
உழவரை வரவேற்பாள் உவகையுடன் நிலமகளும்!
இதழ்விரித்து மொட்டுகள் மலர்ந்து புன்னகைக்கும்!
இதமான நறுமணத்தை காற்றுக்குப் பரிசளிக்கும்!
காலைப் பொழுதில் கண்விழித்து எழுவோரின்
மேனியைத் தழுவி குளிர்விக்கும் இளங்காற்றும்!
காற்றினை வரவேற்று நாற்றுகள் தலையசைக்கும்!
நேற்றைய வலிகளை நிச்சயம் மறக்கடிக்கும்!
இருளும் ஒளியும் இணைந்திடும் நாட்கணக்கில்!
பேருறக்கம் துறந்து விரைந்தெழு மனிதா!
விடியலின் பேரழகு விரைவில் மறைந்திடுமே!
இன்றைய பொழுது இனிய வாய்ப்பென்று
உணர்த்தி ஒளிர்ந்திடும் ஒவ்வொரு விடியலுமே!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

நேசிப்பவர்களை
தொலைப்பது,
எமது அகராதியில்
பாவச்செயல் கண்மணி!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

## 1. பொருளாதாரம் சாரா

இதுதான் நடக்கும் எனச்
சொன்ன விஷயம்
அப்படியே நடக்கையில்.

மனதில் உதித்த
எண்ணங்களை
அப்படியே வார்த்தையாக்கும்போது.
திட்டமிட்டபடியே
செயல் முடியும் போது.


உரிய நேரத்தில்
செய்த உதவியால்,
பெற்றவர் முகத்தில்
மலர்ச்சி காணும் போது.

நம்மைப் போல்
மற்றவரும் யோசிக்கையில்.
எதிர்மனிதனின் உடல்மொழியால்
மனதை ஊகிக்க முடிகிறபோது.

நெடிய இடைவெளிக்குப் பின்
உறவின் மற்றும் நட்பின் சந்திப்பில்.
வருவது பெரு உவகை!

எல்லா சந்தோஷங்களும்
பொருளாதாரம் சார்ந்ததாய்
இருக்க வேண்டிய அவசியம் இல்லை!

****



## 2. இரண்டில் ஒன்று

உரிய மதிப்பும், மரியாதையும்
கிடைக்க வேண்டும் எனில்,

ஒன்று
சக மனிதர்க்கு
அப்படி ஒரு எண்ணம்
இருக்க வேண்டும்!

இல்லையெனில்
நம்மை மதிக்க வேண்டிய
நிர்ப்பந்தம்
சக மனிதர்க்கு இருக்க வேண்டும்!

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

வாழ்க்கையின்
அத்தனையும்
பூஜ்யமாகிறது
ஆரோக்கியத்திற்கு
முன்பு



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# வாழ்க்கையின் விடிவு

சிறுகதை

அது ஓர் அழகிய கிராமம். சுற்றிலும் பச்சைப்பசேலெனக் காட்சியளிக்கும் வயல்வெளிகள், பற்றாக்குறையே இல்லாத நீர் ஓடைகள் மற்றும் குளங்கள், ஊரைச் சுற்றிலும் மலைமுகடுகள் என இயற்கை எழில் கொஞ்சும் கிராமம் அது. அந்தக் கிராமத்தின் தலைவர் சுப்பையா; நேர்மையானவர், தன்மானத்திற்காகவே வாழ்பவர். அவருக்கு ஐந்து பெண் பிள்ளைகள். அதில் நான்கு பேருக்கு நல்ல வரன் பார்த்துத் திருமணம் முடித்துக்கொடுத்துவிட்டார். கடைக்குட்டியாக இருப்பவள்தான் இந்தத் கதையின் நாயகி மலர்விழி. தன் பெயருக்கேற்பப் பேரழகியாகவும், நற்குணமுடையவளாகவும் இருந்தாள். படிப்பில் மிகுந்த ஆர்வமும் ஊக்கமும் கொண்டவள். கடைசிப் பிள்ளை என்பதால் செல்லமாக வளர்ந்தவள்.

வைத்தியராக (மருத்துவர்) வேண்டும் என்பதே அவளது கனவு. அதற்கேற்பப் பள்ளிப் படிப்பில் நல்ல மதிப்பெண்களைப் பெற்றாள். பெற்றோரின் சம்மதத்துடன் வெளியூரில் தங்கிப் படிக்கச் சென்றாள். ஆரம்ப நாட்களில் அவளுக்குப் பெரிய நண்பர் வட்டம் இல்லை. நாட்கள் செல்லச் செல்ல, அவளது நற்பண்புகளால் நண்பர்கள் இணைந்தனர். தோழிகளுடன் ஒற்றுமையாகவும், அவர்களுக்கு உதவும் குணத்துடனும் இருந்தாள். இதனால் அவளது நட்பு வட்டம் பெருகியது. அனைவரும் சந்தோஷமாக இருந்த வேளையில், அவள் ’காதல்’ எனும் மாயையில் விழுந்தாள். ஆரம்பத்தில் அதில் விருப்பமில்லை என்றாலும், தோழிகளின் ஆசை வார்த்தைகளைக் கேட்டு இணங்கிவிட்டாள்.

மெல்ல மெல்லப் படிப்பில் இருந்த கவனம் குறைந்தது; எண்ணம் முழுவதும் காதலிலேயே நிலைத்தது. இறுதியில், உயர்தரப் பரீட்சை கூட எழுதாமல் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டுத் திருமண பந்தத்தில் இணைந்துவிட்டாள். இதனை அறிந்த அவளது தந்தை, தன்மானத்திற்குப் பங்கம் விளைவித்த அவளைத் தன் மகள் இல்லை

என். எப். றிஹரா, வரிப்பத்தான் சேனை, இறக்காமம்

என்று கூறி, உறவைத் துண்டித்து ஊரை விட்டே ஒதுக்கி வைத்துவிட்டார்.

உண்மையில் காதல் என்பது ஓர் ஆலம்பழத்தைப் போன்றது. வெளித்தோற்றத்திற்கு அழகாகவும் கவர்ச்சியாகவும் தெரிந்தாலும், பழத்தைத் திறந்து பார்த்தால்தான் தெரியும், அது உண்ண முடியாமல் புழுக்களும் பூச்சிகளுமாய் இருக்கும் என்று. காதலும் பழகும் வரை இனிக்கும்; திருமணத்திற்குப் பின்பே அதன் சுயரூபம் தெரியும். காதலிக்கும் வரை மலர்விழிக்கு அவனது உண்மை முகம் தெரியவில்லை. வசதியான குடும்பம், அரசு வேலை என்று அவளை நம்ப வைத்திருந்தான். திருமணமான இரண்டு வாரங்கள் நன்றாக இருந்தன; பின்னர் அவனது உண்மை முகம் தெரியவந்தது. அவன் ஏற்கனவே ஒரு திருமணம் முடித்து விவாகரத்து செய்தவன் என்பதும், மதுவிற்கு அடிமையானவன் என்பதும் தெரியவர மலர்விழி மிகவும் வருந்தினாள்.

வாடகை வீட்டிற்குப் பணம் செலுத்தக் கூட வழியில்லை. அவன் தினமும் குடித்துவிட்டு வந்து தெருவில் நின்று சண்டையிடுவான். இரவு முழுவதும் குடித்துவிட்டுப் பகலில் தூங்குவான். ஒருவேளை உணவிற்கே அவள் கஷ்டப்பட்டாள். திருமண வாழ்க்கை அவளுக்கு வெறுத்துப் போனது. தன் பழைய வாழ்க்கையையும், தான் செய்த தவறால் பெற்றோரைச் சேர முடியாமல் போனதையும் எண்ணி ஒவ்வொரு நாளும் கலங்கினாள்.

அப்போதுதான் அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. 'இப்படியே இருந்தால் சரிவராது, வாழ்க்கையில் முன்னேற வேண்டும்' என்று எண்ணி, கைவிட்ட கல்வியை மீண்டும் தொடர முடிவு செய்தாள். உயர்தரக் கல்வியைக் கற்க ஆரம்பித்தாள். கணவனின் ஆதரவு இல்லை

என். எப். றிஹறா, வரிப்பத்தான் சேனை, இறக்காமம்

என்றாலும், ஒரு சுயதொழில் செய்து அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு படிக்கத் தொடங்கினாள். பெரும் சிரமங்களுக்கு இடையில் நன்றாகப் படித்து உயர்தரப் பரீட்சை எழுதினாள். மருத்துவப் பீடத்திற்கும் (Medical College) தேர்வானாள். அல்லும் பகலும் பட்ட கஷ்டத்திற்கு விடிவு கிடைத்தது. பல்கலைக்கழகத்தில் சிறப்பான முறையில் கல்வியை முடித்து மருத்துவராகவும் ஆனாள். அன்றிலிருந்து அவளது வாழ்க்கை மாறியது.

உண்மையில் கல்வி ஒரு மனிதனைப் பூரணமாக்கும்; ஒருவரது தலையெழுத்தையே மாற்றக்கூடிய சக்தி கல்விக்கு உண்டு. எந்த நிலையிலும் கற்கும் காலத்தில் காதலில் விழுந்துவிடாமல், கல்வியைக் கற்று நாளைய உலகில் சிறப்பாக மிளிர வேண்டும்.




என். எப். றிஹரா, வரிப்பத்தான் சேனை, இறக்காமம்

கவிஞர், ஹைக்கூ அடிகளார் திரு. கரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் இரண்டாவது ஹைக்கூத் தொகுப்பான "வைக்கோல் தொப்பி" நூலை வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.




படைப்பு பதிப்பகம் வெளியிட்டுள்ள இந்த நூலில், படைப்பு குழுமத்தின் ஆசிரியர் ஜின்னா ஆஸ்மி அவர்கள் பதிப்புரை எழுதியுள்ளார்கள். முதல் ஹைக்கூ நூலை வெளியிட்ட கவிஞர் திரு. அமுதபாரதி அவர்களும், பொறியாளர் லீலா அவர்களும், கவிஞர் திரு. நயினார் அவர்களும் அணிந்துரை மற்றும் வாழ்த்துரை வழங்கியுள்ளனர்.

இந்நூலில் ஹைக்கூக் கவிதைகளுக்கான விளக்கம், அதன் தோற்றம், பயன்பாடு மற்றும் இன்றைய இலக்கிய உலகில் ஹைக்கூ கவிதைகள் ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறித்து விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. இதுவரை அறிந்திடாத பல அரிய தகவல்கள் இந்த நூல் மூலம் வாசகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கவிஞர் கரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் கவிதைகளில்:
இயற்கை வேகம் எடுக்கிறது. வாழ்க்கை தன் வரைமுறையைக் காட்டுகிறது. எண்ணங்கள் சிறப்பை வெளிப்படுத்துகின்றன. தாவர இனங்கள் மனிதர்களுடனான பங்களிப்பை உறுதி செய்கின்றன. உயிரினங்கள் நம்மோடு ஊஞ்சலாடுகின்றன.

ஏற்கனவே எளிமையும் இனிமையும் கலந்த ஹைக்கூக் கவிதைகள், கவிஞர் கரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் கரங்களில் இன்னும்


கவிஞர் இரா. மதிராஜ்

## வாசிப்பனுபவம்

அழகாகின்றன. மூன்று வரிகளில் முத்தான தகவல்களைத் தொடர்ந்து சொல்லும் இந்த ஹைக்கூ வரிகள் உண்மையில் 'வைர வரிகள்' தான்!

ஒரு ஹைக்கூத் தொகுப்பு வெளிவரும்போது, வெறும் கவிதை மட்டுமல்ல, ஒரு கவிஞனும் புதிதாய்ப் பிறக்கிறான். காலங்காலமாய் வெறுமனே தவம் கிடக்கும் வெற்றுத் தாள்கள் எல்லாம், இந்த ஹைக்கூ வரிகளால் தன்னைத் திருப்தி செய்து கொள்ளட்டும்.

இவரது பல கவிதைகள் ஒரு சங்கிலி போல, எல்லைக்கோடு போல என்னை அதே இடத்தில் நிற்க வைக்கின்றன. ரசித்து வாசித்து, மீண்டும் மீண்டும் வாசித்து கவிஞர்கள் இக்கவிதைகளை இன்னும் அழகாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இனி ஒரு விதி செய்வோம், அதை முதலாவது ஹைக்கூ வரிகளாலே செய்வோம்! விடுதலை என்பது ஒருவரை ரட்சிப்பது மட்டுமல்ல, கவிதை கூட ஒருவரை ரட்சிக்கவே செய்கிறது. வார்த்தைகள் சாதாரணமானவை அல்ல, அவை அசாதாரணமானவை. அவை கவிஞர்களின் மனதில் இருந்தே பிறக்கின்றன. இவரது கவிதைகள். மொத்தத்தில், "வைக்கோல் தொப்பி" அனைவரையும் ஒரு 'சல்யூட்' அடிக்க வைக்கிறது.

தொடர்ந்து எழுதுங்கள் அண்ணா. கவிஞர்களின் மனம் குளிரட்டும். வாழ்த்துகள்!

"வைக்கோல் தொப்பி" நூலில் கண்டெடுத்த சில துளிகள்:

வெளிச்சம் வேண்டாம்
வாழ்க்கையைத் தொடருங்கள்
விட்டில் பூச்சிகள்!
/

கவிஞர் இரா. மதிராஜ்

## வாசிப்பனுபவம்

சிறிய விதை
கையில் வைத்துப் பார்க்கிறேன்
அடர் வனம்!
/
வாகன ஓட்டி
தடுமாறி கீழே விழுகிறார்
தப்பி ஓடும் நாய்!
/
பூமியின் அரக்கன்
மரக்கிளையில் சிக்கித்தொங்கும்
நெகிழிப்பை!
/
மேய்ச்சலுக்குச் செல்லும்
எருமை மாட்டின் முதுகில்
சவாரியாகக் காகம்!
/
மறையும் சூரியன்
பாதியில் நிறுத்தப்படும்
சிறுவர்கள் விளையாட்டு!
/
சாலையோர மரங்கள்
ஒரே நிறத்தில் விழும்
நிழல்!





தொடர்பு கொள்ள: திரு. கரு. கிருஷ்ணமூர்த்தி: +91 97905 96300

கவிஞர் இரா. மதிராஜ்

# வாழ்க்கை என்னும் கவிதை

## வாசிப்பனுபவம்

**நூலாசிரியர் - இரஜகை நிலவன்**




அம்மா என்று அழைக்காத உயிரில்லையே; "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்ற ஐயன் வள்ளுவரின் வேதவாக்கினை இல்லத்தினர் எல்லோரும் பின்பற்றும்போது நிம்மதியும் சந்தோஷமும் நிறைந்த குடும்பம் செழிப்படையும். அன்பை மூலதனமாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கும் இந்த நாவலில் மிக குறைவான கதாபாத்திரங்கள் இடம்பெற்று வாழ்வின் நியதியையும் இல்லறத்தின் மேன்மையையும் குழந்தைகளின் மன இயல்பையும் தெளிந்த நீரோடையில் துள்ளித் திரியும் மீன்களை விழிகளால் ரசிப்பதைப் போலவே எழுத்து மீன்களை நம் இதயவெளியில் துள்ளித் திரிய வைத்திருக்கிறார் ஆசிரியர்.

மனைவியை இழந்த சிவா தனது குழந்தை திவ்யாவை கவனிப்பதற்காகவும் தனது வாழ்வின் அடுத்த கட்ட நகர்விற்காகவும் புவனாவை திருமணம் செய்து கொள்ள முடிவெடுக்கிறான். ஆனால் திவ்யா எந்தச் சூழ்நிலையிலும் புவனாவை அம்மா என்று ஏற்றுக் கொள்ள மறுத்து அடம்பிடிக்கிறாள். பிற்காலத்தில் திவ்யாவின் மூலம் புவனாவின் மனதில் ஏதேனும் தடுமாற்றம் நேரலாம் என்று எண்ணி சிவா புவனாவிடம் காலச் சூழலை விவரிக்கிறான். ஆனால் சிவாவின் பெருந்தன்மையும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் உணர்ந்து கொண்ட புவனா அவரையே திருமணம் செய்து கொள்ள முடிவெடுக்கிறாள். திருமணத்திற்குப் பிறகு மும்பையில் சென்று குடியேறுகிறார்கள். அங்கே குழந்தையை கவனிப்பதில் புவனா காட்டும் அக்கறையும் குழந்தை மீதான புவனாவின் பாசமும் சிறப்பாக வெளிப்படுகிறது.. ஆனாலும் எவ்வளவோ முயன்றும் திவ்யா புவனாவை

**கவிஞர் இளையவன் சிவா**

அம்மா என்று அழைக்க மறுக்கிறாள். ஒரு கட்டத்தில் தன் மீதான நேசம் மறந்து திவ்யாவை மட்டுமே கொண்டாடிக் கொண்டிருப்பதாக சிவாவின் மீது புவனாவிற்கு சந்தேகம் எழுகிறது அவர்களைப் பிரிந்து தனது அம்மா வீட்டிற்கே வந்துவிடும் மனநிலைக்கு புவனா தள்ளப்படுகிறாள். இத்தகு சூழலில் சிவா புவனாவைப் புரிந்து கொண்டு அரவணைத்துச் சென்றானா? திவ்யா புவனாவை அம்மா என்று அழைத்தாளா? என்ற அன்பின் வினாக்களுக்கு நாவல் இறுதியில் விடை பகர்கிறது.

அருமையான தொழில் குடும்ப கதையை எடுத்துக்கொண்டு அதில் அன்பையும் பாசத்தையும் அடித்தளமாகக் கொண்டு சிக்கலற்ற கதையின் போக்கில் மனங்களின் இணைப்பை உறுதிப்படுத்தும் செயல்பாடுகளின் மூலம் இந்த நாவல் விரிவடைகிறது மிகக் குறைவான மாந்தர்களே நாவல் முழுக்க இடம் பிடித்து இல்லறத்தில் மேன்மையையும் பிள்ளைப்பேற்றையும் தாய்மையின் வழியே பெண்களின் மேன்மையையும் உணரச் செய்கின்றனர். இல்லறம் என்பது நல்லறமாக உருமாறுவதற்கு கணவன் மனைவி இடையே ஏற்படும் உறுதியான நம்பகத்தன்மையும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட பாசத்தன்மையும் அடிப்படை எனலாம் இந்த கதைக்கலனில் சிவாவும் புவனாவும் அதையே வெளிப்படுத்தி விடுகின்றனர்.

சிவாவிற்கும் திவ்யாவிற்கும் இடையிலான தந்தை மகள் பாசப்பிணைப்பு புவனாவிற்கும் அவரது அம்மாவிற்கும் இடையிலான தாய் மகள் பாசப்பிணைப்பு சிவாவிற்கும் புவனாவிற்கும் இடையிலான கணவன் மனைவி பாசப்பிணைப்பு என மூன்று தலங்களில் இந்த கதை பயணிக்கிறது. ஒவ்வொன்றிலும் இடம்பெறும் நேசமும் அன்பும் அவர்களின் முழுமையான உள்ளத்தினை வெளிப்படுத்தி விடுகின்றது எந்த ஒரு சூழலிலும் பொறாமையோ சந்தேகமோ எழாமல் சீராக இயங்கும் வாழ்க்கைப் படகில் பாசமே பேரலையென உருமாறி

பிணக்கை ஏற்படுத்தப் பார்க்கிறது. திவ்யாவை தனது பிள்ளையென கவனிக்கும் புவனாவின் தாய்மையில் அம்மா என்று அழைக்கப்படாத சொல் மிகப்பெரிய மன உளைச்சலை ஏற்படுத்தி விடுகிறது சிவாவின் அன்பு அவ்வப்போது அதை மறக்கச் செய்தாலும் ஒரு கட்டத்தில் தாய்மைக்கு ஏங்கும் புவனாவிற்கு அது பெரிய மன பாரமாக மாறிவிடுகிறது காலம் செல்லச் செல்ல திவ்யா மாறி விடுவாள் என்று சிவாவின் நம்பிக்கையை புவனாவின் மனம் ஏற்க மறுக்கிறது. திவ்யாவிடம் பேசி புவனாவை அம்மாவாக ஏற்றுக் கொள்ள சிவா எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று புவனா ஏக்கப்படுகிறாள்.

குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள
மழலைச் சொல் கேளாதார் - என்ற வள்ளுவனின் கூற்றுக்கேற்ப எல்லாப் பெண்களுக்கும் தாய்மையின் சுகம் பேரனுபவமாகவே மாறி நிற்கும். இங்கும் புவனாவிற்கு திவ்யாவின் மீது எழும் அந்த அன்பே இறுதியில் மன உளைச்சலுக்கும் வழிவகுக்கிறது. மொழி தெரியாத நகரத்திற்குள் மாட்டிக் கொண்டு முழிக்கும் மனநிலையையும் தம்மை நம்பி வந்தவர்களை கைவிடாமல் அவர்களுக்கு உதவி செய்து காப்பாற்ற வேண்டும் என்ற நட்பின் பயன்பாட்டையும் கொண்ட கொள்கையிலும் எடுத்துக் கொண்ட செயல் மீதான உறுதியிலும் மனநிலையை மாற்றிக் கொள்ளாமல் தொடர்ச்சியான முயற்சி செய்தல் அவசியம் என்பதை புவனாவின் தாய் வழியாகவும் இந்தக் கதை எடுத்துச் சொல்கிறது.

இயல்பான எண்ணங்களும் எளிமையான காட்சி அமைப்புகளும் காலச் சூழலில் மாறிவரும் மனநிலையின் வெளிப்பாடும் நூல் முழுக்க இடம்பெற்று வாசிக்கும் நமக்கு நல்லதொரு வாழ்க்கைப் பாடத்தை அமைத்துக் கொடுக்கிறது. கதைகள் மக்களுக்கு வாழ்வின் மீதான நம்பிக்கையையும் தொடர்ந்து செயல்படுவதன் வழியே பெற்றுக் கொள்ளும் நிம்மதியையும் உணர்த்துகின்றன.

கவிஞர் இளையவன் சிவா

கட்டுரை

வெங்கட்ராமன் பிள்ளை அம்மணி அம்மாள் தம்பதியருக்கு எட்டாவது குழந்தையாக 19.10.1888ல் பிறந்தார்.

**கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் — 'கைத்தொழில்' நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து**



சிறுவயதிலேயே படம் வரைவதில் ஆர்வம் கொண்டிருந்த இவர் பள்ளிக்கூட வகுப்புகளில் பாடம் படிப்பதைவிட பாடம் சொல்லித்தரும் ஆசிரியரின் படம் வரைவதில் அதிக கவனம் செலுத்தினார். இதனால் தலைமை ஆசிரியரிடம் பிரம்படிபட்டதும் உண்டு. ஆயினும் எலியட் என்னும் 'ப்ரின்ஸிபல்' இவரை பாராட்டி ஒருபேனாவை பரிசளித்தார்.

**படிப்பினில் பட்டம் பெற்றான் பந்துகள் கையாற் காலால் அடிப்பதில் பதக்கம் பெற்றான் — 'அவன்' நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து**

கோயமுத்தூரில் பள்ளி இறுதி படிப்பு மெட்ரிக்கில் முதன்முறை தோல்விக் கண்டாலும் அடுத்த ஆண்டு தேர்ச்சி பெற்று திருச்சியில் எஸ்.பி.ஜி கல்லூரியில் எப்.ஏ வகுப்பில் சேர்ந்தார். பள்ளி ஆண்டு விழாவின்போது கணக்கு பாடத்தில் தவிர மற்ற எல்லா பாடங்களிலும் இவர் முதல் அல்லது இரண்டாம் பரிசு நிச்சயம் பெற்றுவிடுவார். ஆங்கில பாடத்தில் அனேகமாக முதல்பரிசு வாங்குவார். தமிழ், ஓவியம், மொழிபெயர்ப்பு, கட்டுரை எழுதுதல், முதலானவற்றில் ஒவ்வொரு ஆண்டும் முதல்பரிசு இவருக்குதான் கிடைக்கும்..தேகப்பயிற்சி விளையாட்டுகளிலும் உயரம்தாண்டுதல், நீளம்தாண்டுதல்,

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

ஒட்டப்பந்தயங்களில் இவர் முதல் பரிசும் இரண்டாம் பரிசும் பெற்றுள்ளார்.

நாடகப்பிரியன்; நல்ல நாட்டிய கலையில் ஆசை -‘அவன்’ நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து

சிறுவயதிலிருந்தே நாடகங்கள் பார்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். கூத்தில் கோமாளிகள் சபையில் பேசுகின்ற ஆரவாரத்தை அடக்கவும், தூங்குபவர்களை எழுப்பவும் சில வேடிக்கையாக பாடும் பாடல்களை திரும்பத்திரும்ப பாடுவார்கள்.

‘கூத்து பார்க்க வந்தீர்களா? இங்கே குசலம் பேச வந்தீர்களா?
பாட்டு கேட்க வந்தீர்களா? இங்கே பழமை பேச வந்தீர்களா?
ஆட்டம் காண வந்தீர்களா? காலை நீட்டி தூங்க வந்தீர்களா?’

இரவு கூத்து பார்த்துவிட்டு, தூங்கி எழுந்ததும் சிறுவன் ராமலிங்கத்திற்கு காலை உணவு சாப்பிட சென்றபோது இவருடைய தமக்கையார் நாத்திமுறையுள்ள ஒரு பெண்ணுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தார்.

‘அக்கா! சாதம் போட வந்தீர்களா? இங்கே சண்டை போட வந்தீர்களா? என்று பாடிக்கொண்டே ஆடினார். இதைக் கண்ட அனைவரும் சிரிப்பும் மகிழ்ச்சியும் வந்துவிட்டது. மகனுக்கு உடனே சோற்றை பரிமாறினார் அன்னை.

தெருக்கூத்து பாட்டின் மூலமாக கவிபாடும் சக்தி இவருக்கு ஏற்பட்டது. கிட்டப்பா சகோதரர்கள் நாமக்கல்லுக்கு வந்தபோது அவர்களுக்கு பாட்டு எழுதிகொடுத்தார். மேலும் சில நாடக கம்பெனிகளுக்கும் பாட்டு போட்டும், சீன்கள் எழுதியும் தந்துள்ளார்.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

கட்டுரை

**சித்திரத்தில் மிக உயர்ந்த சிற்ப நூலின் அற்புதம்— 'தமிழன்பாட்டு' நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து**

1912ஆம் ஆண்டு இந்தியாவை ஆண்டுக் கொண்டிருந்த இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் அவர்களுடைய முடிசூட்டுவிழாவில் டெல்லியில் நடைபெற்றது. தனது நண்பர் மாணிக்க நாயக்கர் என்பவருடன் டெல்லி சென்றார். முடிசூட்டு விழாவில் ஒரு கண்காட்சியும் நடைபெற்றது. அந்த கண்காட்சியில் ராமலிங்கம் வரைந்த ஒரு பெரிய ஓவியமும் இடம்பெற்றது. அந்த ஓவியத்தை பாராட்டி இவருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. அந்த தங்கப்பதக்கத்தை டெல்லி செங்கோட்டையில் நடந்த ஒருவிழாவில் மேரி மகாராணியார் இவர் உடையில் அணிவித்தார். இதனால் விளம்பரம் இல்லாமல் இருந்த இவரது ஓவிய தொழிலுக்கு கிடைப்பதற்கு அரிய கிராக்கி ஏற்பட்டது. சித்திரவேலையை தொழிலாக நடத்த தயங்கிய இவர் இதன்பின் தைரியமாக தொடங்கினார். ஆர்டர்கள் இவரை தேடி வந்தன.

**காந்தியென்ற சாந்தமூர்த்தி தேர்ந்து காட்டும் செந்நெறி— 'கத்தியின்றி ரத்தமின்றி' நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து**

இவருக்கு சுதந்திரக் கனலை மூட்டியவர் அரவிந்த்கோஷ் ஆவார். முதலில் திலகரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, பின்பு காந்தியாரின் பக்கம் திரும்பி மற்ற தலைவர்களே மனதில் இல்லாமல் காந்தியின் கொள்கைகளை பின்பற்றலானார்.

'கத்தியின்றி ரத்தமின்றி; யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின்நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்'

என்னும் பாடலை உப்புச் சத்தியாகிரகத் தொண்டர்களின் வழிநடைப் பாடலாகப் பாடிச் செல்வதற்கு இயற்றிக் கொடுத்தார்.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

கட்டுரை

பாரதி எனும் பெயரைச் சொல்லு - கெட்ட பயமெனும் பகைவனை வெல்லு—‘பாரதி எனும் பெயர்’ நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து



புதுச்சேரியில் ராமலிங்கம் பாரதியாரை காணச்சென்றார். இவரை ’நல்லஆர்டிஸ்ட்’ என்று பாரதியாருக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார்." ஓ! ஓவியக்கலைஞரா நீர்! எம்மை ஓவியத்தில் தீட்டும். நாம் உம்மை காவியத்தில் தீட்டுவோம்" என்றார் பாரதியார்."இவர் பாடல்களும் புனைவார்" என்று பாரதியாரிடம் தெரிவிக்கவே, பாரதியார் இவரை பாட சொன்னார், இவரும் பாடவே பாட்டை கேட்ட பாரதி, "பலே பாண்டியா பிள்ளை! நீர் ஒருபுலவன் என்பதில் ஐயமில்லை!" என்று பாராட்டினார்.

தமிழன் என்றோர் இனமுன்று; தனியே அதற்கோர் குணமுண்டு—‘தமிழன் இதயம்’நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து

- 1949 இல் தமிழக அரசு இவரை ’ஆஸ்தான கவிஞராக’ நியமித்து சிறப்பு செய்தது.
- 1971 இல் இந்திய அரசு இவருக்கு பத்மபூஷன் பட்டம் வழங்கியது.
- ’காந்தியகவிஞர்’ என்று ராஜாஜி அவர்கள் பாராட்டினார். ஐம்பதிற்கு மேற்பட்ட பல பட்டங்களை பெற்றவர்.
- 1953இல் சாகித்திய அகாதமியின் உறுப்பினராக பணியாற்றினார்.
- இருமுறை 1956, 1962ல் தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் செயலாற்றியவர்.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

கட்டுரை

**தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா—'தமிழன் பாட்டு' நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து**

மலைக்கள்ளன், தாமரைக்கண்ணி, கற்பகவல்லி, மரகதவல்லி, காதல் திருமணம் போன்ற புதினங்களை எழுதியுள்ளார். அரவணை சுந்தரம், மாமன் மகள் என்ற நாடகங்களையும் படைத்துள்ளார். இலக்கியஇன்பம், திருவள்ளுவரும் பரிமேலழகரும், திருவள்ளுவர் திடுக்கிடுவார், வள்ளுவரின் உள்ளம், காந்தியடிகளும் கம்பநாட்டாழ்வாரும், கம்பன் கவிதை, இன்பக் குவியல் ஆகிய இலக்கிய திறனாய்வு நூல்களையும் இயற்றியுள்ளார். கப்பலோட்டியதமிழன், தேசபக்தர் மூவர் எனும் வரலாற்று நூல்களையும், என்கதை என்ற தன்வரலாற்று நூலையும் படைத்துள்ளார்.அவளும் அவனும், அன்பு செய்த அற்புதம், விடுதலைக்கு விதை விதைத்த வீரர் கூட்டம், காந்தி சரித்திரம், நொண்டிச் சிந்து, நாட்டுக் கும்மி போன்ற சிறுகாப்பியங்களையும் எழுதியுள்ளார். தேசபக்தி பாடல்கள், பிரார்த்தனை, தமிழன் இதயம், காந்தி அஞ்சலி, மலர்ந்த பூக்கள், கவிதாஞ்சலி, சங்கொலி, தமிழ் மணம், தமிழ்த்தேன், நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்ற கவிதைத் தொகுப்புகள் இவர் எழுதியவைகள். திருக்குறள் புதுஉரை என்ற விளக்க உரைநூலையும் உருவாக்கியுள்ளார்.

**மரணமென்ற எண்ணமே மனதிலின்றி செய்திடும் திரணமாக எதையுமே தியாகம் செய்ய தந்திடும் —'கொடியை போற்றி கும்பிடு'நாமக்கல் கவிஞரின் கவிதையிலிருந்து**

24.08.1972 அன்று நாமக்கல் கவிஞர் இயற்கை எய்தினார். தமிழக அரசு இவரது நினைவாக நாமக்கல் கவிஞர் மாளிகை என ஒரு வளாகத்தை நிறுவி சிறப்பு செய்துள்ளது.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

நாளை

# நடமதே

எதைப் பற்றியும்

கவலைப்படாமல்

வாழ்கிறவர்களை

இலட்சிய வாழ்க்கைக்கு

உழைப்பு வாழ்க்கைக்குத்

துணையாகக் கொள்ளுதல்

கூடாது.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே                                        முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு   அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு   சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



**அகர முதல இலக்கியப் பேரவை**

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com